முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், செய்யாறு,

நாள். 19.11.2025.

**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், செய்யாறு,**

**அசல் வழக்கு எண். 86/2024**

2025-ம் ஆண்டு நவம்பர் மாதம் 19ம் நாள் புதன்கிழமை வாதி தரப்பு சாட்சியின் சாட்சியம். உறுதிமொழிச் சட்டம் 1969, பிரிவு 3-ன் படி என்னால் ஆணையிடப்பட்டு, சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு விசாரணை செய்யப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | ராஜேந்திரன் | மாவட்டம் | : | திருவண்ணாமலை |
| த/பெ | : | முனுசாமி | வயது | : | 59 |
| ஊர் | : | கூழமந்தல் | தொழில் | : | விவசாயம் |

**வா.சா. 2 (ராஜேந்திரன்) குறுக்கு விசாரணை:**

1. என் பெயர் என்னவென்றால் ராஜேந்திரன் ஆகும். நான் ராஜேந்திரன் தான் என்பதற்கு ஆதாரம் ஏதேனும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. எனக்கு நீதிமன்றத்திலிருந்து சாட்சி சொல்ல அழைப்பாணை எதுவும் வரவில்லை என்று சொன்னால் சரிதான். வாதி மற்றும் அவரின் வழக்கறிஞர் கேட்டுக்கொண்டதன் அடிப்படையில்தான் சாட்சி சொல்ல வந்துள்ளேன் என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள பிரமாண வாக்குமூலமானது வாதியால் தயார் செய்யப்பட்டு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். வழக்கு சொத்தின் பழைய சர்வே எண் எனக்கு தெரியுமா என்றால் தெரியும் அதன் சர்வே எண் 152 ஆகும். அதனின் மொத்த விஸ்தீரணம் 41 சென்ட்டுகள் ஆகும்.

2. நான் எனது பிரமாண வாக்குமூலத்தில் அப்பாதுரையும் கிருஷ்ட கவுண்டரும் வழக்கு சொத்தை அனுபவித்து வந்தார்கள் என்பதற்கான ஆவணம் ஏதேனும் இருக்கிறதா அதை நான் பார்த்துள்ளேனா என்றால் அவர்கள் இருவரும்தான் அனுபவித்தார்கள். ஆவணம் எதுவும் பார்க்கவில்லை. என்னுடைய பூர்வீகம் என்னவென்றால் வெள்ளாமலை கிராமம் ஆகும். நான் அதன் பிறகு எப்போது கூழமந்தலுக்கு வந்துள்ளேன் என்றால் 1985ல் வந்து நான் வீடு கட்டிக்கொண்டு 30 வருடங்களுக்கு மேலாக வசித்து வருகிறேன். நான் என்ன வேலை செய்கிறேன் என்றால் விவசாயம் செய்கிறேன். அப்பாதுரையும், கிஷ்டகவிண்டரும் எந்த வருடத்தில் இறந்தார்கள் என்ற விவரம் தெரியுமா என்றால் அப்பாதுரை சுமார் 1972ல் இறந்திருப்பார், கிஷ்டகவுண்டரைப்பற்றி தெரியவில்லை. அதற்குமுன் இறந்திருப்பார். வழக்கு சொத்திற்கான அ பதிவேடு யாருடைய

பெயரில் இருந்தது என்று தெரியுமா என்றால் தெரியும். யார் பெயரில் இருந்தது என்றால் வேலாயுதம் பெயரில் இருந்தது. அவர் 1ம் பிரதிவாதியின் தந்தை என்றால் சரிதான்.

3. சிட்டா அடங்கல் வேலாயுதம் பெயரில்தான் இருந்தது என்றால் லோகநாதன், வேலாயுதம் ஆகிய இருவரின் பெயரிலும் இருந்தது. மேற்படி ஆவணத்தை நான் பார்த்துள்ளேனா என்றால் பார்த்துள்ளேன். எந்த வருடத்தில் பார்த்துள்ளேன் என்றால் சுமார் 15 ஆண்டுகளுக்கு முன்பு பார்த்தேன். மேற்படி ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்படவில்லை என்று சொன்னால் சரியல்ல. நான் என்னுடைய பிரமாண வாக்குமூலத்தில் வழக்கு சொத்தின் மொத்த விஸ்தீரணமான 28 சென்ட்டில் வேலாயுதம் என்பவருக்கு 16 சென்ட்டும் எனக்கு 12 சென்ட்டும் வாச்சா பாகப்பிரிவினையின் மூலமாக பாகமாக ஒதுக்கப்பட்டது என்று சொல்லியுள்ளேன் என்று சொன்னால் சரிதான்.

4. மேற்படி 12 சென்ட்டுதான் இந்த வழக்கு சொத்து என்று சொன்னால் சரிதான். மேற்படி வழக்கினை நான் தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால் சரிதான். மேற்படி 12 சென்ட்டை எனக்கு எப்போது ஒதுக்கினார்கள் என்றால் 96ல் ஒதுக்கினார்கள். 12 சென்ட்டானது எனக்கு ஒதுக்கப்பட்டதன் அடிப்படையில் பட்டா பெயர் மாற்றம் செய்துகொண்டேனா என்றால் இல்லை. மேற்படி பாகப்பிரிவினை யாருடைய முன்னிலையில் நடைபெற்றது என்றால் வேலாயுதம் முன்னிலையில் அவருடைய பாகத்தை எனக்கு விற்பனை செய்தார். மீதமுள்ள பாகம் லோகநாதனுக்கு கொடுக்கப்பட்டது. தற்போது வழக்கு சொத்தின் பட்டாவானது யார் பெயரில் உள்ளது என்றால் 1996 முதல் இன்றுவரை வேலாயுதம் பெயரில்தான் உள்ளது. மேற்படி வேலாயுதம் எப்போது இறந்தார் என்றால் 1996ல் இறந்தார்.

5. வழக்கு சொத்தின் பட்டாவானது வேலாயுதம் மகள் பிரேமா பெயரில் எப்போது வந்தது என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் பிரேமா பெயரில் சுமார் 5 வருடம் முன்பு வந்தது. மேற்படி பிரேமா 2ம் பிரதிவாதிக்கு எப்போது வழக்கு சொத்தினை கிரயம் செய்தார் என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியாது. தற்போது 2ம் பிரதிவாதி பெயரில் பட்டா, சிட்டா, அடங்கல், அ பதிவேடு உள்ளது என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியாது. வாதி எனக்கு என்ன உறவு முறை என்றால் எனக்கு பழக்கமானவர் ஆவார். நான் ஏதோ ஒரு ஆதாயத்திற்காக வாதிக்கு இந்த வழக்கிற்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. நான் உண்மைதான் பேசுகிறேன்.

**இத்துடன் குறுக்கு விசாரணை முடிவடைகிறது**

**1ம் பிரதிவாதியின் வழக்கறிஞர் மேற்படி குறுக்கு விசாரணையை ஏற்றுக்கொள்வதாக தெரிவித்தார்.**

**<u>மறுவிசாரணை</u>**

இல்லை.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சி அதை படித்து பாரத்து/படிக்கக் கேட்டு சரியென்று ஒப்புக்கொண்டு கையெழுத்து செய்தார்

K NALEENI

Digitally signed by K NALEENI
Date: 2025.11.19 17:31:43 +0530

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,

செய்யாறு